திரு. செ. கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992—93 ஆம் ஆண்டு பொதுக் கணக்குக் குழுவின் 113-வது, 114-வது, 115-வது, 116-வது மற்றும் 117-வது ஆகிய 5 அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.

மேலும் 115-வது, 116-வது மற்றும் 117-வது ஆகிய அறிக்கைகளுக்கு போதிய அவகாசம் இன்மையால் அச்சிட்ட பிரதிகளுக்குப் பதிலாக படியெடுத்த பிரதிகள் சட்டமன்ற நூலகத்தில் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன் பேரவை உறுப்பினர்களுக்கு தனியாக அவை அனுப்பி வைக்கப்பெறும்.

(ஆ) உரிமைக் குழு

மாண்புமிகு பேரவை தலைவர்: உரிமைக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, பேரவைத் துணைத் தலைவர், உரிமைக் குழுவின் தலைவர்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இல்லஸ்ட்ரேடட் வீக்லி ஆப் இந்தியா' இதழ் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை பற்றிய உரிமைக் குழுவின் அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த அறிக்கை.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் தே. குமாரதாஸ் அவர்கள் மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை பற்றிய உரிமைக் குழுவின் அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

9. அரசினர் தீர்மானங்கள்.

(அ) ''இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி ஆப் இந்தியா'' வார இதழ் மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை உரிமைக் குழுவின் அறிக்கைகளை ஆய்வு செய்தல். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

1993 ஏப்ரல் 30]

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இன்று பேரவைக்கு அளிக்கப்பெற்ற ''இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி ஆப் இந்தியா''. இதழ் மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கையைப் பேரவை விதி 229(ஆ)-இன் கீழ் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் இல்லை.

மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெறுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்றுக் கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம் தீர்மானம் நிறைவேறியது. மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''இந்த அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளை சட்ட மன்றப் பேரவை விதி 229(ஈ)-ன்படி இப்பேரவை இசைந்து ஏற்றுக்கொள்கிறது என்ற தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெறுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.